

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.12.2024) ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் முத்தமிழ் அரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு மருத்துவ முகாம் அமைத்து, மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதை பார்வையிட்டார். இந்த நிகழ்வில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கா.செல்வம், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆ.ரா. ராகுல் நாத், மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ் உள்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.12.2024) ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் முத்தமிழ் அரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு அரிசி, பிஸ்கட், பாய் போர்வை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார். இந்த நிகழ்வில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கா. செல்வம், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆ.ரா. ராகுல் நாத், மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ் உள்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### விமானப் போக்குவரத்துத் துறையில்

# செயற்கை நுண்ணறிவு இயந்திரம் பயன்படுத்தப்படுமா?

## மக்களவையில் ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, டிச. 2 - விமான போக்குவரத்து துறையில் செயற்கை நுண்ணறிவு கற்றல் இயந்திரங்களை பயன்படுத்தும் திட்டம் ஒன்றிய அரசிடம் உள்ளதா? என மக்களவையில் அரக் கோணம் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி? எழுப்பினார்.

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள் 28 நவம்பர் 2024 அன்று மக்களவையில், விமானப் போக்குவரத்து துறையின் மேம்பாட்டிற்காக செயற்கை நுண்ணறிவு மற்றும் கற்றல் இயந்திரங்கள் போன்ற கணினி தொழிநுட்பங்களை பயன்படுத்தும் திட்டங்கள் ஏதேனும் உள்ளதா? என்றும் அது தொடர்பான விவரங்களை உறுப்பினர்களுக்கு அளிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் விமானப் போக்குரவரத்து துறை இணையமைச்சர் முரளிதர் மஹால் அவர்களிடம் விரிவா ன கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் விமானப் போக்குரவரத்து துறை இணையமைச்சர் அளித்த பதில் பின் வருமாறு:

விமானப் போக்குவரத்து துறையை மேம்பாட்டினை உறுதிப்படுத்தவும், விமான நிலையங்களை நவீனப்படுத்தவும், செயற்கை நுண்ணறிவு மற்றும் கற்றல் இயந்திரம் போன்ற கணினி தொழி ல் நுட்பங்கள் மிகவும் உதவியாக இருந்து வருகிறது என்றும், இவற்றின் பயன்பாட்டினால் கணினி கட்டமைப்புகள் அதிகரித்து வந்துள்ளது என்றும், இதன் தொடர் வழிமுறைகள் அதிகரித்த வண்ணம் உள்ளது என்றும் ஒன்றிய அரசின் விமானப் போக்குரவரத்து துறை இணையமைச்சர் முரளிதர் மஹால் அவர்கள், மக்களவையில், திமுக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.

### மேலூர் பகுதியில் 'டங்ஸ்டன்' சுரங்கப் பணிகள்: ஒன்றிய அரசின் சுரங்கத் துறை அமைச்சருக்கு - 2023 ஆம் ஆண்டிலேயே

# தமிழ்நாடு அரசின் எதிர்ப்பினை தெளிவாகத் தெரிவித்தேன்!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அறிக்கை!

சென்னை, டிச.2–

**மேலூர் பகுதியில் உள்ள கிராமங்களில், டங்ஸ்டன் சுரங்கப் பணிகளை மேற்கொள்ள எதிர்ப்பு தெரிவித்து 3.10.2023 நாளன்று, ஒன்றிய சுரங்கத் துறை அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில், தமிழ்நாடு அரசின் எதிர்ப்பினை தெளிவாகத் தெரிவித்தேன்.**



நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :-

மதுரை மாவட்டம், மேலூர் பகுதியில் உள்ள கிராமங்களில், டங்ஸ்டன் சுரங்கப் பணிகளை மேற்கொள்வதற்காக, ஹிந்துஸ் தான் சிங்க் நிறுவனத்திற்கு ஒன்றிய அரசு உரிமம் அளித்துள்ளது. இந்த கிராமங்களில் வாழக்கூடிய விவசாயிகளின் வாழ்வாதரம் இந்த சுரங்கப் பணிகளால் பாதிக்கப்படும் என்பதால், இந்தப் பகுதி மக்கள் இதை எதிர்த்து போராட்டங்களை மேற்கொண்டனர்.

இந்த நிலையில், மேலூர் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கக்கூடிய எந்த சுரங்கப் பணிகளுக்கும் தமிழ்நாடு அரசு எப்போதும் அனுமதி அளிக்காது என்று உறுதியளித்து, இந்துஸ்தான் சிங்க் நிறுவனத்திற்கு அளிக்கப்பட்ட சுரங்க உரிமத்தை இரத்து செய்ய வேண்டும் என்று பிரதமர் அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள். இதனை ஏற்று, போராட்டத்தில் ஈடுபட்டு வந்த அப்பகுதி மக்களும் தமது போராட்டத்தை விலக்கிக் கொண்டுள்ளனர்.

முதலமைச்சர் அவர்களின் இந்த உறுதியான நடவடிக்கையை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளதை சகிக்க முடியாத சிலர், ஒன்றிய அரசின் இந்த சுரங்க உரிமத்திற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்ததாக, விஷமத்தன மான வதந்திகளை பரப்பி வருகின்றனர். மேலும், இந்த உரிமத்தை வழங்குவதற்கு முன்பாக மாநில அரசின் கருத்துக்க ளைப் பெற்றதாக ஒன்றிய அரசும் தவறான தகவலை தெரிவித்துள்ளது. இது குறித்த உண்மை நிலையை விளக்கிட விரும்புகின்றேன்.

கடந்த 2023ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், முக்கிய கனிமவளங்களை ஏலம் விடுவது தொடர்பாக கனிமக் கொள்கையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை ஒன்றிய அரசு தெரிவித்த உடனேயே, 3.10.2023 நாளன்று, ஒன்றிய சுரங்கத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தில், தமிழ்நாடு அரசின் எதிர்ப்பினை தெளிவாக தெரிவித்தேன். ஆனால், 2.11.2023 அன்று ஒன்றிய சுரங்கத்துறை அமைச்சர் அவர்கள் இதற்கு அளித்த பதிலில், உரிய சட்டத் திருத்தங்களை மேற்கொண்ட பிறகே இந்த ஏலம் விடப்படுவதாகவும், தேசிய அளவிலான தேவைகளை கருத்தில் கொண்டு மாநில அரசுகள் இந்த கொள்கைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டு நமது எதிர்ப்புகளை நிராகரித்தார்.

இதனைத் தொடர்ந்து மதுரை மேலூர் பகுதியில் உள்ள நிலங்களைப் பற்றிய விவரங்கள் ஒன்றிய அரசால் கேட்கப்பட்ட போதும், உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ள அரிட்டாபட்டி பகுதியானது ஒரு பல்லுயிர் பெருக்க வரலாற்றுத் தலம் என்பதை சுட்டிக்காட்டி னோம். இவை எவற்றையுமே கருத்தில் கொள்ளாத ஒன்றிய அரசு ஏலம் விட்டு டங்ஸ்டன் உரிமத்தை மேற்கூறிய நிறுவனத்திற்கு அளித்தது.

இன்று மக்களுடைய எதிர்ப்பையும் முதலமைச்சர் அவர்களின் உறுதியான நிலைப்பாட்டினையும் கண்டு மிரண்டு, ஒன்றிய அரசும், அதனோடு சேர்ந்து இரட்டை வேடம் போடக்கூடிய எதிர்க்கட்சிகளும், மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக இந்த சுரங்க ஏலத்துக்கு தமிழ்நாடு அரசு தனது ஒப்புதலை தெரிவித்ததாக பொய்ச் செய்திகளை பரப்பி வருகின்றன. இவை எதையும் மக்கள் நம்பத் தயாராக இல்லை என்பதே உண்மை.

இவ்வாறு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# சிங்கம்புணரியில் மாபெரும் இரத்ததான முகாம்!

## நகர–ஒன்றியக் கழகம் சார்பில் நடைபெற்றது!

சிங்கம்புணரி, டிச.2 - தமிழகத்தின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாகொண்டாட்டத்தின் தொடர்ச்சியாக சிவ கங்கை மாவட்ட கழகச் செயலாளர் கூட்டுற வுத் துறை அமைச்சர் பெரிய கருப்பன் பரிந்துரையின் கீழ் சிங்கம்புண ரியில் ஒன்றிய நகர தி.மு.க. மற்றும் இளைஞர் அணி சார்பில் அண்ணா மன்றத்தில் ரத்த தான முகாம் நடைபெற்றது.

பல்வேறு பகுதிகளில் இருந்து இளைஞர்கள் முதல் 58 வயது வரை உள்ளவர்கள் பல்வேறு அரிய வகை குரூப் ரத்தங்களை வழங்கினார்கள்.

சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் அறிவுறுத்தலின்படி சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது, சிங்கம்பு ணரி ஒன்றிய நகர தி.மு.க. மற்றும் இளைஞர் அணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது .

கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மூன்றாம் ஆண்டு மாபெரும் ரத்ததான முகாம் சிங்கம்புணரி அண்ணா மன்றத்தில் நடைபெற்றது.

ரத்ததான முகாமை சிங்கம்புணரி ஒன்றிய செயலாளர் பூமிநாதன், பொதுக் குழு உறுப்பினர் அம்பல முத்து, சோமசுந்தரம்,நகர செயலாளர் கதிர்வேல், அவைத் தலைவர் சிவக்குமார், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இந்திய செந்தில் உள்ளிட்டோர் தலைமையில் ஒன்றிய துணைச் செயலாளர் சிவ புரி சேகர், பிரதிநிதி குடோன்மணி, நகர துணை செயலாளர் அலாவுதீன்,ஒன்றிய இளைஞரணி மனோகரன் ,நகர இளைஞரணி அருண் பிரசாத் ,சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணைத் தலைவர் ஆனந்த கிருஷ்ணன், அயலக அணியின் மாவட்ட துணை அமைப்பாளர் புகழேந்தி, நகர விவசாய அணி அமைப்பாளர் பரிஞ்சி சரவணன் மற்றும் பலர் முன்னிலையில் பிரான்மலை அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் நபிஷாபானு உள்ளிட்ட 10 பேர் கொண்ட மருத்துவ குழுவினர் முன்னிலையில் ரத்ததான முகாம் நடைபெற்றது.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவில் நடைபெற்ற ரத்ததான முகாமில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இளைஞர்கள் முதல் 50 வயது வரை உள்ளவர்கள் பலர் முன்வந்து பல உயிர்களைக் காக்க தங்களின் உதிரங்களை வழங்கி சொன்றார்கள். ரத்ததானம் வழங்க வந்த கொடை வள்ளல்களில் உதிரங்களை எடுத்து சிவகங்கை அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மாபெரும் ரத்ததான முகாமில் உதிரங்கள் வழங்கிய அனைவருக்கும் விழா ஏற்பாட்டாளர் சிங்கம் புணரி நகர அவைத் தலைவர் சிவக்குமார் ஏற்பாட்டில் இளநீர், பழங்கள் மற்றும் சத்தான ஃப்ரெஷ் ஜூஸ்கள் பானங்கள் உணவுகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில், ஒன்றிய பொருளாளர் பாஸ்கரன், நகர பொருளாளர் செந்தில் கிருஷ்ணன், தொழில் நுட்ப அணி மாடர்ன் சையது,ஒன்றிய வர்த்தக அணி துணை அமைப்பாளர் பார்த்திபன்,பேரூராட்சி கவுன்சிலர்கள் ஜெயக்குமார்மீனா,மற்றும் திவ்யா பிரேம்,பொன் சரவணன்,வழக்கறிஞர் துறை வேலன்,இளைஞர் அணியைச் சேர்ந்த 25வது முறையாக ரத்த தானம் வழங்கிய ஜெய்ஹிந்த் பாலா, அழகு ராசு, குமரன், சிராஜுதீன், அமுதன், முரசொலி கார்த்திக், அருண், மற்றும் பலர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிங்கம்புணரி ஒன்றிய நகர தி.மு.க. மற்றும் இளைஞர் அணியினர் சார்பில்சிங்கம்புணரி நகர அவை தலைவர் சிவக்குமார் ஏற்பாடு செய்திருந்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.பி.என். மாயன்

**டிசம்பர் 1 (2013)**



**கொடைக்கானல் நகரச் செயலாளராக தொடர்ந்து 38 ஆண்டுகள் சிறப்புறப் பணியாற்றியவர். திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**'மிசா' சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறை வாசமும் – இந்தி எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, ஈழத் தமிழர் ஆதரவு ஆகிய போராட்டங்கள் மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**


**கொடைக்கானல் நகராட்சி, நகரியக் குழு உறுப்பினராகவும், கொடைக்கானல் கூட்டுறவு பண்டகசாலைத் தலைவராக இரண்டு முறையும் – கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொன். குணசேகரன்

**டிசம்பர் 1 (2021)**



**மாணவப் பருவத்திலேயே, மாணவர் அணியில் தன்னை இணைத்துக் கொண்ட இவர், என்.மோட்டூர் கிளைச் செயலாளர், நான்கு முறை மத்தூர் ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**மத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**சமூக சேவையாற்றியதன் காரணமாக 'சமூக விருதுகள்' பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**